# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**1975 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் தேதிய**

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(22.04.75 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)


# மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தம்)

**1970 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மகாவலி அபிவிருத்திச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

## சட்டப் பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** தற்போது, 1970 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மகாவலி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் சபைக்கு நியமிக்கப்பட்ட பதவிவழி உறுப்பினர்களுள், நான்கு உறுப்பினர்கள் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரும், பயிர்த் தொழில் அமைச்சின் செயலாளரும், நிதி அமைச்சின் செயலாளரும், திட்டமிடல் அமைச்சின் செயலாளருமாவர். சட்டத்தின் 3 ஆம் பிரிவில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள், மேற்கூறப்பட்டுள்ள அமைச்சு ஒவ்வொன்றுக்கும் பொறுப்பான அமைச்சரை, செயலாளருக்குப் பதிலாகத் தமது அமைச்சிலிருந்து பிரதிநிதியொருவரை நியமிக்கக் கூடியவராக்குவதுடன், அரசாங்க திருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரையும் தமது அமைச்சிலிருந்து பிரதிநிதியொருவரை நியமிக்கக்கூடியவராக்குகின்றன.

மேலும், நிருவாக மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும், மின்சார சபையின் பிரதிநிதியும் சபையின் உறுப்பினர்களாக இல்லாதொழிவர்.

1—எ 12687—6,935 (02/75)

# மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தம்)

ச.வ.ஓ 55/73
904

**1970 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மகாவலி அபிவிருத்திச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் ஆக்கப்படுவதாகுக:—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1975 ஆம் ஆண்டின் ஆம் இலக்க மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1970 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.*

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதாம் ஆண்டின் 14 ஆம் இலக்க மகாவலி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ் உட்பிரிவின் (அ), (ஆ) ஆகிய பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(அ) பொறியியல், பயிர்த்தொழில், அறிவியல், வர்த்தகம், நிருவாகம் அல்லது கணக்காளர் தொழில் என்பனவற்றில் அநுபவம் வாய்ந்தோரும் தகுதியுடையோருமானவர்களுளிருந்து அமைச்சரால் நியமிக்கப்படுபவர்களும், இதனகத்திதன் மேல் "நியமன உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களுமான, மூன்று உறுப்பினர்; அத்துடன்

(ஆ) எட்டு பதவி வழியுறுப்பினர்கள் ; இவ் எண்மருள்—

(i) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர், திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் ;

(ii) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவழிகள் அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் :

2—எ 12687 (02/75)

(iii) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர், நிதி அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் ;

(iv) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர், பயிர்த்தொழில், காணிகள் அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் ;

(v) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர், அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் ;

(vi) ஒருவர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் பதவியை அப்போதைக்கு வகித்துவரும் ஆளாதல் வேண்டும் ;

(vii) ஒருவர், பயிர்த்தொழிற் பணிப்பாளர் பதவியை அப்போதைக்கு வகித்துவரும் ஆளாதல் வேண்டும் ;

(viii) ஒருவர், காணி ஆணையாளர் பதவியை அப்போதைக்கு வகித்துவரும் ஆளாதல் வேண்டும்," ; அத்துடன்

(ஆ) அவ் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (13) ஆம் உட்பிரிவினை விட்டுவிடுவதன் மூலமும்.